Bundesamt
für Migration
und Flüchtlinge

# தகவல் பத்திரம்

நீண்டகாலம் ஜெர்மன் நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவருக்கும், கூட்டு ஐரோப்பிய பிரஜைகளுக்கும் வழங்கும் சமூக கலாச்சார மொழி சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பு (இன்றிகிறச்சியோன் வகுப்பு)

**அன்பான ஜெர்மன் நாட்டில் வாழும் வெளிநாட்டவர்களே,**

நீங்கள் ஜெர்மன் நாட்டில் பல காலம் வசிக்கும் வெளிநாட்டவர்களாயினும் சரி அல்லது கூட்டு ஐரோப்பிய பிரஜைகளாயினும் சரி நீங்கள் கூட்டுமாநில காரியாலயத்திற்கு இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் கலந்துக்கொள்வதற்காக அனுமதி வழங்கும் படி விண்ணப்பம் செய்யலாம். உங்களது விசாவில் வெளிநாட்டவர் சட்டப்படி இந்த வகுப்பில் கலந்துக்கொள்ள உரிமையில்லாத பட்சத்திலோ அல்லது இவ்வுரிமை இழந்திருந்தாலும் கூட இந்த வகுப்பில் கலந்துக்கொள்வதற்காக அனுமதி கேட்டு விண்ணப்பம் அளிக்கலாம்.. பாடசாலைக்கு செல்லும் சிறுவர்களும், இளைஞர்களும், வயது வந்த வாலிபர்களும் இந்த வகுப்பில் கலந்துக்கொள்ள முடியாது.

<u>இன்றிகிறச்சியோன் வகுப்பு என்றால் என்ன?</u>

இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பின் முக்கிய பகுதியாக அதிகூடிய பட்சம் 600 பாடசாலை மணித்தியாலங்கள் மொழி வகுப்பு நடைபெறும். அத்துடன் 30 பாடசாலை மணித்தியாலங்கள் அடங்கிய ஜெர்மன் சமூக கலாச்சார மொழி சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பு வழங்கப்படும்.

மொழியை கற்பிக்கும் வகுப்பில் உங்களது நாளாந்த வாழ்க்கையில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான சொற்களை கற்பிக்கப்படும். இவ்வேளையில் காரியாலயத்துடன் தொடர்பு கொள்கையில் அல்லது உங்களது அயல் வீட்டாருடன் கதைப்பதற்கு தேவையான மொழியையோ அல்லது உங்களுடன் தொழில் புரிபவருடன் கதைப்பதற்கோ அல்லது கடிதம் எழுதுவதற்கோ அல்லது விண்ணப்பங்களை நிரப்பவதற்கு, தேவையானதை பூர்த்தி செய்யும் அளவிற்கு மொழி கற்பிக்கப்படும். மொழி கற்பிக்கும் வகுப்பு படி பல அத்தியாயமாக பிரிக்கப்படும். ஒவ்வொரு அத்தியாயத்திலும் 100 பாடசாலை மணித்தியாலங்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளது. நீங்கள் எந்த அத்தியாயத்தில் இருந்து தொடங்கவேண்டும் என்பது வகுப்பு தொடங்கும் முன்னர் ஒரு பரீட்சை மூலம் முடிவு செய்துக்கொள்ளலாம்.

உங்களுக்கு இந்த வழி நடத்தம் வகுப்பில் ஜெர்மன் வாழ்க்கை கலாச்சாரம் சம்பந்தமான விடையத்தில் தகவல்களையும் சட்டத்தையுமிட்டிய தகவல்களையும், கலாச்சார சரித்திர சம்பந்தமான விடையத்தையிட்டியும் கற்பிக்கப்படும்.

இந்த வகுப்பு முற்றுபெறும் வேளையில் இரண்டு வித்தியாசமான பரீட்கைகள் நடத்தப்படும். ஒரு பகுதியில் ஜெர்மன் மொழி சான்றிதழுக்கான பரீட்சை, இது ஒரு அங்கீகாரம் பெற்ற சான்றிதழாகும். நீங்கள் ஜெர்மன் மொழியில் பேச்சு பரீட்சையிலும், எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்தால் மேற்கருதப்பட்ட மொழிச்சான்றிதழ் வழங்கப்படும். இரண்டாவது பகுதியில் நீங்கள் எதை இந்த கலாச்சார வழிநடத்தம் வகுப்பில் விளங்கியுள்ளீர்கள் என்பதையிட்டிய பரீட்சை நடத்தப்படும். இந்த இறுதி பரீட்சைக்கான பெறுபேறுகளை பெறுவதுடன் இந்த வகுப்பை நடத்தம் பாடசாலையினால் சான்றிதழும் வழங்கப்படும். இதைவிட இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கு ஒழுங்காக சமூகமளிப்பதற்காக ஒரு சான்றிதழ் பெறுவதற்கும் உரிமையுண்டு. இந்த வகுப்கை நடத்திய பாடசாலை இந்த சான்றிதழை இந்த வகுப்பு முடிந்த பின்பு உங்களுக்கு வழங்க கடமைப் பட்டள்ளது.

<u>இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் கலந்துக் கொள்வதால் நீங்கள பெறும் நன்மை</u>

ஐரோப்பிய நாட்டைத் தவிர்ந்த வெளிநாட்டவர்கள் ஜெர்மன் நாட்டில் கால வரையரையற்ற வதிவிட(விசா) பெறுவதாயின் ஒரு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும். இதில் அளவிற்கு தேவையான ஜெர்மன் மொழியும், அடிப்படை சட்ட, கலாச்சார, ஜெர்மன் வாழ்க்கையையிட்டிய விடையங்களையும் அறிந்திருக்கவேண்டும் என்பவை அடங்கும். இந்த

KNr. 630009 BAMF 2006-12

வகுப்பில் வெற்றிகரமாக உங்களது பரீட்சை சித்தியடைந்தால் இந்த நிபந்தனையில் ஒன்று பூர்த்தியாகிவிடும். இதைவிட நீங்கள் விரைவில் ஜெர்மன் பிரஜா உரிமை பெற வாய்ப்புக்கள் உண்டு.

இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கு பதிவு செய்யும் விண்ணப்பம்

தயவுசெய்து இந்த வகுப்பிற்கு அனுமதி பெறும் விண்ணப்பப் பத்திரத்தை முழுமையாகவும் வாசிக்கக்கூடிய வகையிலும் நிரப்பவும். தேவையானால் உங்கள் அருகாமையில் இப்படியான வகுப்பை நடத்தும் நபரை நாடவும். அவர் உங்களின் இந்த விண்ணபத்தை நிரப்ப உதவி செய்வார். இந்த விண்ணப்பம் வெளிநாட்டவர் காரியாலயத்திலும், இவ்வகுப்பை நடத்தம் பாடசாலையிலும், கூட்டுமாநில குடிவரவு அகதிகள் காரியாலயத்திலும் இன்டர்நெட் பகுதியிலும் (www.bamf.de) பெற்றுக்கொள்ளலாம். இந்த விண்ணபத்தை உங்கள் நகரத்திற்கு பொறுப்பான கூட்டுமாநில காரியாலயத்திற்கு அனுப்பவும்.

உங்களுக்கு இந்த இன்றிகிறச்சியோன் வகுப்புக்கு அனுமதி கிடைக்குமாயின் கூட்டுமாநில காரியாலயம் உங்களுக்கு அனுமதியை எழுத்து மூலம் வழங்கும். இதே வேளையில் உங்களது வீட்டுக்கு அருகாமையிலுள்ள அனைத்து இன்றிகிறச்சியோன் வகுப்பு நடைபெறும் பாடசாலைகளின் முகவரிகளை அனுப்பி வைக்கும்.

இந்த வகுப்பில் கலந்துக்கொள்ளலாம் என்று கிடைக்கம் அனுமதி பத்திரத்தில் எவ்வளவு காலம் இது செல்லுபடியாகும் என குறிக்கப்படும். இந்த செல்லுபடியாகும் நாட்களுக்குள் இவ் இன்றிகிறச்சியோன் வகுப்பை தொடங்க வேண்டும். தயவுசெய்து இந்த அனுமதி பத்திரம் கிடைத்தவுடன் இன்றிகிறச்சியோன் வகுப்பு நடைபெறும் பாடசாலையுடன் தொடர்பு கொண்டு இந்த எழுத்து மூலம் கிடைத்த அனுமதி பத்திரத்தை அவர்களிடம் காண்பிக்கவும்.

இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கான செலவுகள்:

இவ் இன்றிகிறச்சியோன் வகுப்புக்காக நீங்கள் ஒரு மணித்தியாலத்திற்கு 1 ஒயிறோ படி இப்பாடசாலைக்கு செலுத்த வேண்டும். உங்களால் செலுத்தப்படும் பணம் ஒரு அத்தியாயத்திற்கு 100 மணித்தியாலத்திற்குரிய பணமாகும். அத்துடன் சமூக கலாச்சார சட்ட ஒழுங்கை வழிநடத்தம் வகுப்பிற்காக, வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னரே இக்கட்டணத்தை செலுத்த வேண்டும். உங்களுக்கு சொந்த வருமானம் இல்லாத வேளையில் உங்கள் வாழ்க்கை செலவிற்கு பொறுப்பாக உள்ளவர் இப்பணத்தை செலுத்த வேண்டும்.

இவ்வகுப்பிற்கு அனுமதி பெற்றவர்களில் வேலையில்லாதவர்கள், வேலையில்லாப் பணம் II பெறுபவர்கள், அல்லது சமூக உதவிப் பணம் பெறுபவாகள் இப்பாடசாலைக்குரிய கட்டணத்தை கட்டாமல் விடுவதற்கு விண்ணப்பம் செய்து பணம் கட்டுவதை தவிர்த்துக்கொள்ளலாம். இவ்வகுப்பிற்கு சமூகமளிப்பவர்களுக்கு பணம் செலுத்த இருக்கும் அல்லது பணம் கட்டுவதற்கு பொறுப்பாக உள்ளவர் மேற்கருதப்பட்ட உதவிகளை பெறுபவர்களாக இருப்பாராயின் பணம் செலுத்த தேவையில்லை. இப்பணத்தை மேற் கருதப்பட்டவாறு கட்டமுடியாத வேளையில் எழுத்து மூலம் நகரத்திற்கு பொறுப்பாக உள்ள கூட்டு மாநிலத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். எது உங்களுக்கு பொறுப்பாக உள்ள கூட்டு மாறிலம் என்று முகவரி பட்டியலை பார்த்து அறிந்துக்கொள்ளலாம். இப்பணத்தை கட்டமுடியாத வேளையில் இதற்கான ஆதாரத்தின் பிரதி மூலம் அனுப்பி வைக்கவும். இவ்விண்ணப்பத்தை ஆகபிந்தியது உங்கள் வகுப்புக்கு பதிவு செய்வதற்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பப் பத்திரத்தை வகுப்பு நடைபெறும் பாடசாலையிலும், உங்களது வெளிநாட்டவர் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வகுப்பிற்கு செல்ல அனுமதி பெற்றவர்களில் கூட்டுமாநில காரியாலயத்தினால் இவ்வகுப்பிற்கு பணம் செலுத்த தேவையில்லை என அனுமதி பெற்றவாகள், வேலையில்லாதவர்களுக்காக கிடைக்கும் பண உதவி பெறுபவர்கள், அல்லது சமூக உதவி பணம் பெறுபவர்கள் இப்படிப்பட்ட உதவிகள் நிறுத்தப்படும் பட்சத்தில் உடனடியாக கூட்டுமாநில காரியாலயத்திற்கு அறிவிக்கவேண்டும். இவ்வகுப்பிற்கான இறுதி பரீட்சைக்கான செலவை நீங்களே பொறுப்பேற்க வேண்டும். நீங்கள் இதற்குரிய செலவிற்காக இக்கட்டணத்தை தவிர்த்துக்கொள்வதற்காக உங்களுக்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலத்தின் காரியாலயத்தில் எழுத்து மூலம் விண்ணப்பம் செய்யலாம். இதற்கான விண்ணப்பப்பத்திரம் இவ் குப்பு நடைபெறும் பாடசாலையிலோ அல்லது குடிவரவு/அகதிகளுக்கு பொறுப்பாக உள்ள கூட்டு மாநில காரியாலயத்தின் இன்டர்நெட் பக்கத்தில் (www.bamf.de) பெற்றுக்கொள்ளலாம்.